Registered as a NewsPaper

59

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆனி - 10 25-06-2003 புதன்கிழமை ஓசை 127

N.I.T.M
மல்லாவியில்......
M.S.Word 2000x P
ஆரம்பம் 28-06-03
சனி மாலை 5.00 மணி
(3243)

## மீண்டும் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கலாம் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை

கடந்த சில மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த பேச்சுவார்த்தைகள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழ் நெற் இணையத் தளத்திற்குத் தெரிவித்துள்ளார்.

நோர்வே அனுசரணையாளர்களுடன் லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல்கள் ஆக்கபூர்வமானதாக அமைந்திருந்ததாக அவர் மேலும் கூறினார்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற கலந்துரையாடலில் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் நோர்வே வெளிவிவகார அமைச்சின், நிறைவேற்று அதிகாரி லிசா கோல்டன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசின் யோசனைகளுக்காகப் புலிகள் காத்திருப்பதாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நோர்வே அனுசரணையாளர்களிடம் தெரிவித்துள்ளார். உறுதியான யோசனைகள் முன்வைக்கப்படும் பட்சத்தில் புலிகள் அவற்றை ஆராய்ந்து அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றங்கள் தொடர்பாகத் தமது கருத்துக்களை முன்வைப்பதென அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து உத்தேச இடைக்கால நிர்வாகத்திற்கு நடைமுறை ரீதியான இறுதிச்செயல் வடிவம் கொடுப்பதற்காக இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இச்சந்திப்பின் போது சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலில் மாற்றம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் அவர் நோர்வே அனுசரணையாளர்களிடம் வலியுறுத்தியதாகத் தெரிய வருகிறது.

# இடைக்கால நிர்வாக புதிய திட்டவரைபு

# நாடு திரும்பியதும் சமர்ப்பிக்கப்படும்

## லண்டனில் பிரதமர் ரணில்

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப்புலிகளால் நீண்ட காலமாக கோரப்பட்டு வருகின்ற இடைக்கால நிர்வாகம் தொடர்பான, முன்னையதைவிட கூடுதலான விடயங்களை உள்ளடக்கிய புதிய முன்வரைபை லண்டலில் இருந்து இலங்கைக்குத் திரும்பியதும் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்க உள்ளதாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

லண்டனில் இடம்பெற்ற வர்த்தக சம்மேளனத்தினருடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் அனுப்பிவைக்கும் விடயங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் ஆராய்ந்து பதிலளிப்பார்கள்.

அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் முன்னேற்றங்கள் நிச்சயமாக இடம்பெறும். அமைதி நிலைக்கு நாடு தற்போது திரும்பிக் கொண்டிருக்கின்றது.

எனவே பயமின்றி எமது நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளமுடியும்.

அடுத்த சில வாரங்களில் விடுதலைப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் உள்விவகார அமைச்சருடன் ரணில் விக்கிரமசிங்க பேச்சு

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனின் உள்நாட்டு விவகார அமைச்சர் டேவிட் பிளங் கெட்டை சந்தித்துப் பேசியுள்ளார்.

குடிவரவு, குடியகல்வுக்கான விசாக்களை வழங்குவது மற்றும் பிரிட்டனில் புகலிடம் கோரும் இலங்கையர்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது இலங்கையைத் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நாடாக கருதப் போவதில்லை என்று பிரிட்டனின் உள் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## லொத்தர் சபையைப் பொறுப்பேற்க சனாதிபதி மீண்டும் நடவடிக்கை

சனாதிபதி சந்திரிகா லொத்தர் சபையைக் கையேற்பதில் தோல் விகண்டபின் மீண்டும் அதை தம்வசம் எடுப்பதற்குத் தீர்மானம் செய்துள்ளார்.

சனாதிபதியின் பேச்சாளர் ஜினதாச பீரிஸ் இது குறித்துத் தெரிவிக்கையில் லண்டனிலிருந்து கலந்து கொண்டு திரும்பிய பின்சனாதிபதியால் தீர்மானம் எடுக்கப்படும். அமைச்சர் மிலிந்த மொற கொட, அமைச்சர் ரவிகருணாநாயக்க

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் முக்கிய மாற்றம்; சனாதிபதி சந்திரிகா ஆலோசனை

அமைச்சரவையில் முக்கிய சில மாற்றங்களைச் செய்வது குறித்து சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீவிரமாக ஆராய்ந்து வருவதாக சனாதிபதி செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

சனாதிபதி இது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொதுசன ஐக்கிய முன்னணி சிரேஷ்ட தலைவர்கள்பலருடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியதாகவும் தெரிய வருகின்றது.

அண்மைக் காலமாக அமைச்சரவையில் இருக்கும் சில அமைச்சர்களின் செயற்பாடுகள், நடவடிக்கைகளில் அதிருப்தி கொண்ட சனாதிபதி அவர்களுக்குப் பல தடவைகள் எச்சரிக்கை விடுத்த போதிலும் அவர்கள் அதனை பொருட்படுத்தாமல் தாம் நினைத்தபடி நடந்து வருவதன் காரணமாகவே சனாதிபதி இந்த

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ம.நே.கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பெண்கள் பிரிவிற்கு பயிற்சி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகளில் மகளிர் அணி ஒன்று புதிதாக இணைக்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் நேற்று முன்தினம் மனிதநேய கண்ணிவெடி

(08 ஆம் பக்கம் பார்க்க)



## புலனாய்வுத் துறையினரின் பாதுகாப்பை அதிகரிக்குக!

### தென் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

பயங்கரவாதத்திற் கெதிரான புலனாய் வுத்துறையிலீடுபட்டுள்ள புலனாய்வுத்துறை அதிகாரிகளுககான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டுமென மேல்மாகாண தென்பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் பத்திரன தெரிவித்துள்ளார். தெஹிவளை புலனாய்வுத்துறை பொறுப்பதிகாரியின் கொலை புலனாய்வுத் துறையினரின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளது என அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## பொங்குதமிழ் எழுச்சி நாள் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகம் ஏற்பாடு செய்துள்ள பொங்கு தமிழ் எழுச்சிநாள் நிகழ்வுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இந்நிகழ்வுக்கான அழைப்புக்கள் பல உள்ளூர், சர்வதேச பிரதிநிதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மேலும் சிறிலங்காவின் அரசியல் தலைவர்களான சிறிலங்கா சனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சர் சந்திரசேகரன் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புப் பிரமுகர்கள், அமெரிக்கா, இந்தியா, நோர்வே, ஜப்பான் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்கள், நோர்வேயின் சமாதானக் குழுவின் விசேடதூதுவர் எரிக் சொல் கெய்ம், ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் உட்பட பல உலக தலைவர்களுக்கு பொங்குதமிழ் எழுச்சி நாள் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி. சிஹல உறுமய கட்சித் தலைவர்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளுக்கும் இவ்வழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளுக்கான முன்னோடி நிகழ்வுகள் யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் எங்கும் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

ஒவ்வொரு வலயங்களிலும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கென அமைக்கப்பட்ட கல்வி அதிகாரிகளைக்கொண்ட குழுவினர் பாடசாலைகள் தோறும் சென்று பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக கருத்துக்களையும் விளக்கங்களையும் வழங்கி வருகின்றனர்.

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### தவறிவிட்டது

பயஸ் குருஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், சாரதி அனுமதிப்பத்திரமும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய புத்தகம் என்பன 22.06.03 அன்று புளியங்குளத்திற்கும் மல்லாவிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுப்பவர்கள் UNHCR கிளிநொச்சி அலுவலகத்தில் ஒப்படைக் குமாறு கேட்டுக்கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (சி-8184)

### வவுனியா ஒப்ரிக்கல்

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும். வவுனியா ஒப்ரிக்கல்-30, பஸ்நிலையம், வவுனியா.(3343)

## முன்பள்ளிச் சிறுவர் விளையாட்டு விழா

(ஒட்டுசுட்டான்)

பொருண்மிய மதியுரையகத்தால் ஒட்டுசுட்டானில் நடாத்தப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டு விழா கடந்த ஞாயிறன்று நடைபெற்றது. பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் வை.விமலேந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் ஒட்டுசுட்டான் நாவலர் முன்பள்ளி, சம்மளங்குளம் முன்பள்ளி, சின்னச்சாளம்பன் முன்பள்ளி ஆகியன கலந்துகொண்டன. இறுதியில் பரிசில்கள் வழங்கப்பட்டன. (05)

## நெடுந்தீவிற்கு 17 அகதிகள் வந்தனர்

இந்தியாவிலிருந்து நேற்று முன்தினம் 17 இலங்கை அகதிகள் நெடுந்தீவுக் கடற்கரையை வந்தடைந்துள்ளார்கள்.

இவர்களை ஊர்காவற்றுறைப் பொலிசார் விசாரித்தபின்னர் அரசாங்க அதிபர் ஊடாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் (33)

# இரணைமடு நீர்ப்பாசனத் திட்ட உற்பத்தி அதிகரிப்புக் கருத்தரங்கு

## - யூலை முதலாம் நாள் நடைபெறும்

கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன குடியேற்றத் திட்டத்தில் உற்பத்தி அதிகரிப்பு ஆய்வு தொடர்பான கருத்தரங்கு கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் எதிர்வரும் யூலை முதலாம் திகதியன்று காலை 10.00 மணிக்கு கிளி.அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரணைமடு திட்டத்தின் வள அபிவிருத்தி ஆலோசகர்கள் தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வரைபு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதன் காரணத்தினால் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் மேற்படிக்கருத்தரங்கு நடைபெறவுள்ளதென கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவிததுள்ளார். (சோ)

## தமிழ் தட்டெழுத்தாளர் தேவை

*புதுக்குடியிருப்பிலுள்ள தமிழீழ மாவீரர்பணிமனைக்கு ஒரு தமிழ் தட்டெழுத்தாளர் தேவையாக உள்ளது. நல்ல அனுபவமுள்ளவருக்கும் மாவீரர் போராளி குடும்பத்தவருக்கும் ஆண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். விரும்புபவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடனும் நற்சான்றிதழ்களுடனும் அனைத்து விபரங்களடங்கிய விண்ணப்பத்துடன் 27-06-2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்குச் சமுகம் கொடுக்கவும்.*

தமிழீழ மாவீரர் பணிமனை,
மாரியம்மன் வீதி,
புதுக்குடியிருப்பு.

பொறுப்பாளர்.

(3350)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று
## முல்லைத்தீவு

### தற்காலிக இடைநிறுத்தம்

ஈழநாதம் பத்திரிகையில் 2003.05.30ம் திகதி வெளியான வழ.இல: 29/1995, தன்மை நானாவிதம் எனும் வழக்குத் தொடர்பான பகிரங்க ஏல விற்பனை அறிவித்தலின் பிரகாரம் எதிராளியானவர் நீதிமன்றில் தோன்றி நடவடிக்கை தொடரப்பட்டமையால், பகிரங்க ஏல விற்பனையானது தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என அறியத் தரப்படுகின்றது.

**பதிவாளர்,**
**தமிழீழ மாவட்ட நீதிமன்று,**
**முல்லைத்தீவு.**

**நீதிமன்றின் கட்டளைப்படி.**

*(3244)*

## கணினிப் பயிற்சிப் போதனாசிரியர் நியமனத்திற்கான நேர்முகத் தேர்வு

கணினிப் பயிற்சிப் போதனாசிரியருக்கான நேர்முகத் தேர்வு 26.06.2003 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனையில் நடைபெறும்.

கல்வித்தகைமைகள்:-
01. க.பொ.த.சா/த சான்றிதழ்.
02. க.பொ.த.உ/த சான்றிதழ்.
03. கணினிப்பயிற்சி சான்றிதழ்கள்.
04. தேசிய அடையாள அட்டை.

மேற்படி சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்கு வருகை தரவும்.

*ப. அரியரத்தினம்,*
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*கிளிநொச்சி.*

(சி-8183)

# கேள்வி அறிவித்தல்
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் யாழ்ப்பாண வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளரினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் வீதி திருத்த வேலைகட்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த தரம்(ICTAD) | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத்தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| வீரவன்னி வாதரவத்தை வீதி புனரமைப்புவேலை | M 7 | Rs. 45,000 | Rs.750 |

(02) நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால்(ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் தரவு பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் வீதி பராமரிப்பு ஒப்பந்தக்காரராகவும் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(03) இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர்போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்

05) கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகையாக ரூபா 45,000/=, மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 750 உம் செலுத்தி 09-07-2003 ம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

06) கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம். பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் "வீரவன்னி வாதரவத்தை வீதி புனரமைப்பு" என எழுதப்படல் வேண்டும்.

07 பொறியிடப்பட்ட கேள்விகள் "த்லைவர், யாழ் மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில்10-07-2003ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் கேள்வி 10-07-2003 ம் திகதி பி.ப.3.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

சே.பத்மநாதன்
தலைவர்
மாவட்ட கேள்விச்சபை
யாழ்ப்பாணம்.

(சி-8180)

**மாவட்டக் கேள்விச் சபை,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்,**
**2003.06.20.**

## சுகாதாரத் திணைக்களத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு பயிலுனர்களை

# ஆட்சேர்ப்புச் செய்தல் - 2003

**சுகாதாரத் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளை உடையோர் அத்தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் எனது பணிமனைக்கு அலுவலகநேரத்தில் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

**தகைமைகள்**

1. க.பொ.த.(சா/த)தில் கணிதம், விஞ்ஞானம், மொழியாற்றல் ஆகியவற்றில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
2. க.பொ.த. (உ/த)தில் கணிதம், விஞ்ஞானம், ஆகிய ஏதேனும் ஒரு பிரிவில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியடைந்திருந்தல்.
3. வயதெல்லை 18-30 (31.12.2002 ஆம் திகதியன்று)
4.தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
5. மூன்று வருடத்திற்குக் குறையாத வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய வதிவிட அத்தாட்சிப் பத்திரம்.
6. வாக்காளர் பட்டியல்.
7. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
8. முடிவுத்திகதி:- 21.07.2003


**பதவிகள்:-**

01. PHARMACISTS
02. MEDICAL LABORATORY TECHNOLOGISTS
03. PHYSIOTHERAPISTS
04. RADIOGRAPHERS
05. OCCUPATIONAL THERAPISTS
06. OPTHALMIC TECHNOLOGISTS
07. ENTOMOLOGICAL ASSISTANTS
08. DENTAL TECHNICIANS
09. SCHOOL DENTAL THERAPISTS
10. PUBLIC HEALTH INSPECTORS
11. MIDWIVES
12. PUBLIC HEALTH LABORATORY TECHNOLOGISTS
13. E.C.G.RECORDISTS.
14. E.E.G.RECORDISTS.

**மேலதிக விபரங்களுக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள எனது பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

***வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி,***
***மா.சு.சே. பி.பணிப்பாளர்,***
***கிளிநொச்சி.***

(சி-8182)



இந்தியா - மகாராஷ்ராவில் நடந்த ரயில் விபத்தின் கோரம் சம்பவ இடத்தில் பொது மக்கள் கூடிநிற்கின்றனர். இவ்விபத்தில் பலியானோர் 51ஆக உயர்ந்துள்ளது.

# அமெரிக்க கோரிக்கைகளுக்கு கட்டுப்பட்டு எமது செயற்பாடுகளை மாற்ற முடியாது!

## -ஈரானிய அணுசக்தி நிலையத் தலைவர்

(தெஹ்ரான்)

**ஈரான் மேற்கொண்டு வருகின்ற அணுவாயுதக் கொள்கை நடவடிக் கையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. குறிப்பாக அமெரிக்காவின் கோரிக்கை களுக்கு கட்டுப்பட்டு எமது கொள்கை செயற்பாடுகளை மாற் றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஈரானுக்கு இல்லை என ஈரான் பகிரங்கமாக அறிவித்துள்ளது.**

ஈரான் மின்சாரம் உற்பத்தி செய்வதாகக் கூறிக் கொண்டு யுரேனியத்தைக் களஞ்சியப் படுத்தி வைத்துள்ளது என்றும் அதனூடாக அணுவாயுதத்தை உற்பத்தி செய்து வருகிறது என ஈரானை அமெரிக்கா குற்றஞ் சாட்டி வருகின்றது. அத்துடன் ஈரானில் அணுவாயுத சோதனை நடவடிக்கையில் ஐ.நா.இறங்க வேண்டும் என அமெரிக்கா ஐ.நாவை அழுத்தி வருகின்றது.

ஈரானிய கொள்கை நிலைப் பாட்டில் மாற்றமில்லை என தெரிவித்துள்ள ஈரானிய அணு சக்தி முகவர் நிலையத்தின் தலைவர் கொலாம் ரெஸா அகா ஸாடே சீ.என்.என். செய்தி நிறு வனததுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் ஐ.நா.வினால் ஏற்படுத் தப்படுகின்ற சர்வதேச அணு வாயுத உற்பத்தி தடை செய்யும் மேலதிக சாசனமொன்றை ஈரான் சந்திக்க தயாராய் இருப்பதாக வும் தெரிவித்துள்ளார் இருப் பினும் குறிப்பிட்ட மேலதிக சாச னத்தில் என்ன கூறப்பட்டுள்ளது. என்பது குறித்து ஐ.நா.வுடன் கலந்துரையாடிய பின்பே ஈரான் குறிப்பிட்ட மேலதிக சாசனம் குறித்து தீர்மானம் எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் காலா காலம் புதிது புதிதாக திணிக்கப் படுகின்ற கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் ஈரான் தலை வணங்கவேண்டும்என்ற அவசி யம் இல்லை. அமெரிக்காவுடன் ஈரானுக்கு எதுவித ராஜதந்திர தொடர்புகளும் இல்லை அத்த கைய தொடர்பை ஏற்படுத்தும் எண்ணமும் ஈரானுக்கு இல்லை.

ஈராக் யுரேனியத்தைக் கொண்டு தான் 6.000 மெகா வோட்ஸ் அடங்கிய மின் உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. என் றும் கூறினார்.

# சனாதிபதி நிலைப்பாட்டில் மாற்றமில்லை குழப்ப நிலையில் லைபீரிய யுத்த நிறுத்தம்!

(மோன்ரோவியா)

தனது பதவிக் காலம் முடியும் வரை பதவியில் இருக்கப்போவ தாக லைபீரிய சனாதிபதி சார்ள்ஸ் டேலர் அறிவித்துள் ளார்.

லைபீரியாவில் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள போதிலும் யுத்த நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமா என சந்தேகம் வலுப்பெற்று வருகிறது.

லைபீரிய சனாதிபதியை பதவி விலகுமாறு தீவிரவாதிகள் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலையில் மோதல்களும் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

லைபீரியா படைகளை தீவிர வாதிகள் இரு முனைகளில் தாக்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இது குறித்து இழப்புக்கள் ஏற் பட்டதா என்பது குறித்து அறி விக்கப்படவில்லை.

இந்நிலையில் யுத்த நிறுத் தம் கடைப்பிடிக்கப்படுவதில் ஒரு அசாதாரண நிலை தோற்றம் பெற்றுள்ளது. குறிப்பிடத்தக்கது.

# யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் சட்டத்தில் பெல்ஜியம் மாற்றம்

(புருஸ்ஜலஸ்)

வெளிநாடுகளில் நடந்த யுத்தக் குற்றங்களை விசாரிக்க வழி வகுத்துள்ள சட்டத்தின் பரப்பெல்லையை குறைக்க விருப்பதாக பெல்ஜியம் அறி வித்துள்ளது. அமெரிக்காவின் அழுத்தத்தை அடுத்தே சர்ச் சைக்குரிய சட்டம் திருத்தப் படுவதாக அவதானிகள் கூறு கின்றனர்.

யுத்தக் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் இனப்படுகொலைகள் என்பன குறித்து பெல்ஜியத்தில் விசா ரிப்பதற்கு அதிகாரமளிக்கும் சட்டம் 1943ல் உருவாக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தின் கீழ் ஈராக் கில் இடம்பெற்ற யுத்தக் குற் றங்கள் தொடர்பாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், பிரிட் டிஷ் பிரதமர் பிளேயர் ஆகியோர் மீது பெல்ஜியத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பெல்ட், வெளியுறவு அமைச்சர் கொலின் பவல், தளபதி டொமி பிராங் ஆகியோர் மீதும் வழக்கு தாக்கல் செய் யப்பட்டுள்ளது. இதனால் அமெ ரிக்கா கடும் ஆத்திரமுற்றுள்ளது.

பெல்ஜிய பிரதமர் கைஎதுர் ஹொஙப்ஸ்டட் சனநாயக நாடு களுக்கு இச்சட்டத்தை பாவிப் பதில்லை என்ற வகையில் திருத்தங்கள் செய்யப்படும் என்று கூறியுள்ளார்.

# புஷ் நிர்வாக கொள்கைகளை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் அரசின் வெளிநாட்டு உள்நாட்டு கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூ யோர்க் நகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலுக்காக நிதி திரட்டும் வகையில் சனாதிபதி புஷ் அதற்கான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வருகின்றார்.

நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத் தில் அவர் பங்கேற்ற போதே ஏராளமானோர் அவருக்கு எதிர்ப் புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் செய்தனர்.

ஈராக் உட்பட பிறநாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு அந் நாடுகளின் மீது போர் தொடுப்பது மற்றும் உள்நாட்டில் நிலவும் பிரச்சினைகளைக் கண டிக்கும் வகையில் புஷ்ஷிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றுள்ளன.



இந்திய-சீன உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் சீனப் பிரதமர் வென் ஜியாபோவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்றனர்.



பயிற்சி முடித்த இஸ்ரேலிய விமானப் படையினரின் அணிவகுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளை விமானப் படை ஜெட் விமானங்களும் தமது சாகச விளையாட்டை காண்பிக்கின்றன.

# சிரியா எல்லையில் அமெரிக்கா நடவடிக்கை; இரு சிரிய எல்லைப் படையினர் உயிரிழப்பு!

## -சதாமை தேடும் செயற்பாடென அறிவிப்பு

ஈராக்கில் சதாமும் அவரது புதல்வர்களும் தலைமறைவாகி யிருப்பதாகக் கருதப்படும் பகுதி யில் அமெரிக்க இராணுவத்தினர் நேற்று முன்தினம் விசேட தாக் குதல் ஒன்றை நடாத்தியுள் ளனர்.

மேற்கு ஈராக்கில் எல்லைப் புறப் பகுதியில் மேற்கொள் ளப்பட்ட இத்தாக்குதலின் போது சிரிய எல்லைப்படை இராணுவத் தினர் இருவர் உயிரிழந்துள் ளனர்.

சதாமோ, அவரது புதல்வர் களோ இறந்தமைக்கான எவ்வித தகவலும் கிடைக்கவில்லை யென அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

சிரிய எல்லைப் பகுதியில் சென்ற வாகனத் தொடர் அணி ஒன்றின் மீதே அமெரிக்க இரா ணுவத்தினர் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

# பாக்தாத் விமான நிலையம் 12 வருடங்களின் பின் திறப்பு!

(பாக்தாத்)

12 வருடங்களாக மூடப்பட்டி ருக்கும் ஈராக்கில் பாக்தாத் விமான நிலையத்தை அடுத்த மாதம் 15 ஆம் திகதி திறப் பதற்கு அமெரிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவின் ஈராக்கிற் கான புனரமைப்புத் திட்டத்தில் இவ் விமான நிலையத்தைத் திறப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஈராக் மீதான தாக்குதலின் போது அமெரிக்கா இவ் விமான நிலை யம் மீது முக்கிய கவனம் செலுத தியமை குறிப்பிடத்தக்கது.

## சிறுநீரக மோசடி; 13 பேர் கைது!

(ஹைதராபாத்)

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் சிறுநீரக மோசடி தொடர்பாக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆந்திராவில் சிறுநீரகங்களை விற்றுத் தரும் புரோக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஏழைகளின் பணப்பற்றாக்குறையைப் பயன்படுத்தி அவர்களின் சிறுநீரகங்களை விற்று 10 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை தரகுப் பணம் பெற்று வருகின்றனர்.

## செனட்டர்கள் நம்பிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்க படையினரால் ஈராக்கின் முன்னாள் சனா திபதி சதாம் ஹுசைன் கைது செய்யப்படுவார் என அமெரிக்க செனட் புலனாய் வுக் குழுவின் தலைவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள் ளனர்.

ஈராக்கில் மேற்கொள்ளப் பட்டு வரும் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் பயன ளிக்குமென செனட்டரான பெட்ரொபட்ஸ் கூறியுள்ளார்.



பாரிஸில் DAR ரக ஜெட் விமானம் ஒன்று வான் வெளியில் நடத்தும் சாகசம்

# "ஆட்சி மாற்றத்திற்கான தருணம் வந்துவிட்டது"

## சுதந்திரக் கட்சி மாநாட்டில் அறைகூவல்

**- வேலவன் -**



"ஆட்சிமாற்றத்துக்கான தருணம் வந்துவிட்டது" என்ற அறைகூவலுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தேறியுள்ளது. 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இவற்றில் கட்சியில் உள் விவகாரங்களும் அடங்கியிருக்கின்றன. ஆனால் கட்சி உறுப்பினர்களை உசுப் பேற்ற புலிகள் யுத்தத்திற்குத் தயாராவதாகவும் ஆயுதக் கப்பல்கள் வந்து கொண்டிருப்பதாகவும் உத்தியோகப்பற்றற்ற ஈழமொன்றை வழங்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயாராகியுள்ளதாகவும் கட்சியின் தலைவி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

மேல்மாகாணத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பலம் வாய்ந்த இடமான நித்தம்புவவிலுள்ள சிறிசங்கபோதி மகாவித்தியாலயத்தில் இம்மாநாடு நடைபெற்றது. சிரேஷ்ட உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் என ஆயிரத்திற்கு மேற்பட் டோர் மாநாட்டில் பங்கேற்றிருக்கின்றனர். மாநாடு ஆரம்ப மாவதற்கு முன்னர் ஹொரகொல்லவிலுள்ள எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்கு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அனுராபண்டாரநாயக்கவும் மலர் வளையம் வைத்து வணக்கம் செலுத்தியிருக்கின்றனர். இந்த மாநாட்டிற்காக உடத்தலவின்ன படுகொலையை விசாரித்து வரும் யூரர்களற்ற நீதிமன்றம் படுகொலைச் சந்தேக நபரும் சக்திவாய்ந்த அமைச்சராக இருந்தவருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு சிறைச்சாலை அதிகாரிகளுடன் செல்ல அனுமதியளித்திருந்தது. அவரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக-அல்லது அறை கூவலாக "ஆட்சி மாற்றம்" என்பது இருந்தது. அதற்கான தருணம் வந்துவிட்டதாக சிறிலங்கா சனாதிபதி அடிக்கடி கூறிவந்தாலும் நடைமுறையில் சாத்தியப்படாமலிருப்பது கட்சி அமைப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மனச் சோர்வு உண்டாகியிருக்கலாம். அதனைப் போக்கும் வகையில் அவரது உரை அமைந்திருக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

கட்சியின் மாகாணசபை அமைச்சர் ஒருவரும் உறுப்பினர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள நிலையிலும் அதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் விரும்பியவாறு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையிலும் இம்மாநாடு நடை பெற்றதால் பாதுகாப்புக் குறைவாக வுள்ள மாகாண அமைச்சர்கள், உறுப் பினர்கள், அமைப்பாளர்களுக்கு ஆறு தல் கூற வேண்டியிருந்தது.

அபிவிருத்தி லொத்தர் சபை விவ காரம் பெரும் புரட்சியை ஏற்படுத்தி ஆட்சிக் கவிழ்ப்புக்கு உதவுமா? என ஒத்திகை பார்க்கப் போய் அது சனா திபதியின் அதிகாரத்தின் எல்லையை வரையறுத்துக் காட்டியிருக்கிறது. இத னால் சனாதிபதி சந்திரிகாவின் நிறை வேற்று அதிகாரம் குறித்த அவநம்பிக் கையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அகற்ற சந்திரிகா - அநுரா கூட்டாக எடுக்கும் முயற்சி குறித்து கட்சிக்குள்ளே பல சந் தேகங்களும் முரண் பாடுகளும் உள்ளன. கூட்டு சாத்தியமாகுமா? சாத்தியமாகினால் ஜே.வி.பி. சு.க. மீது ஆதிக்கம் செலுத் துமா? சிறிது சிறிதாகக் கட்சியையே விழுங்கி விடுமா? ஆட்சியைப் பெற முடி யுமா? ஆட்சியைப் பெற்றால் நிலைக்குமா? போன்ற சந்தேகங்கள் சிறிலங்கா சுதந் திரக் கட்சியினரிடையே உண்டு.



இவ்வாறானதொரு சூழ்நிலையில் கூடிய மாநாட்டில் சனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரையின் முக்கிய அம்சம் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான கூக்குரலாகவே அமைந்தது.

சமாதான சூழலைப் பயன்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் புலிகள் கப்பல் கப்பலாக ஆயுதங்களைக் கடத்தி வருவதாகவும் அவற்றில் ஒன்றை தான் உத்தரவிட்டு கடற்படை 'மூழ்கடித்துவிட்டதாக வும் அவர் கூறியிருக்கிறார். அடுத்து ஒரு யுத்தம் தொடங் கினால் 10 நாட்களுக்குத்தான் அரசாங்கத்தால் தாக்குப் பிடிக்கமுடியும் எனப் பாதுகாப்பு அமைச்சர் தன்னிடம் கூறிய தாகவும் அவர் தெரிவித்தார். யுத்தம் எவ்வேளையிலும் வெடிக் கலாம் என்பதை தான் முப்படைகளினதும் தளபதி என்ற ரீதியில் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இந்நிலையில் அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் திராணி தனது கட்சிக்கு மட்டுமே உண்டு எனவும் இடதுசாரிகளையும் மக்களையும் இணைத்துக் கொண்டு விரைவில் இதனைத் தான் செய்யப் போவதாகவும் அவர் கூறினார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே தம்முடன் இணைந்திருக்கும் இடதுசாரிகளான கம்யூனிஸ்ட் கட்சியின ரையும் சமசமாஜக் கட்சியினரையும் இம்மாநாட்டின் போது "தகைமையற்ற செயற்திராணியற்றவர்கள்" என வர்ணித்து அவ்வாறானவர்களுடன் ஆட்சியொன்றை அமைக்க விரும்ப வில்லை எனவும் தகுதியானவர்களைக் கொண்ட ஒருகுழுவின ருடனேயே தனது கூட்டு இருக்குமென சந்திரிகா அறிவித் துள்ளார்.

அவர் "தகுதியானவர்கள்" என வர்ணிக்கும் தற்போது அவருடன் கூடவுள்ள இடது சாரிகள் தனித்துப் போட்டியிட்டு (ஒரு சிலரைத் தவிர) வெற்றிபெறக்கூடியவர்கள் அல்ல என்பதும் ஜே.வி.பி. தனித்து நின்றே போட்டியிட்டு 16 தொகுதிகளைக் கைப்பற்றிய கட்சி என்பதும் உண்மையே. இத் தகுதியை வைத்துக்கொண்டு அவர்கள் சந்திரிகாவின் பதவிக்கு அல்லது நிலைக்கு சமனான பதவியொன்று உருவாக்கப்பட்டு தமக்கு வழங்கப்பட வேண்டும் என கோருவதாகவும் செய்தி கள் வெளிவந்திருக்கின்றன.

ஆனால் மக்களை இணைத்துக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்துவது என்பது சமாதானமுயற்சிகள் -மந்த நிலையிலேனும் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சாத்திய மானதொன்றல்ல என்பது அவருக்கே தெரிந்தவிடயம்.

இதனால் தான் சமாதான நடவடிக்கைகள் அவரின் கடுமை யான விமர்சனத்துக்கு உள்ளாகிவருகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டின் அறைகூவலான "ஆட்சியமைக்க வேண்டிய தருணம்" என்பது அவரைப் பொறுத்தவரை என்றோ வந்து விட்டதாயினும் அதனைச் செயற்படுத்துவதில் உள்ள முட்டுக்கட்டை சமாதான நடவடிக்கைகள் தான்.

இதனாலேயே புலிகள் யுத்தத்திற்குத் தயாராகி வருவ தாகவும் விரைவில் யுத்தம் ஆரம்பமாகும் என்று கூறித் தமது ஆதரவாளர்களை உற்சாகப்படுத்த முயன்றிருக்கிறார்.

---

# கடமையைச் சரிவர நிறைவேற்றாத அரச ஊழியர்கள் மீது நடவடிக்கை

## – அமைச்சர் அலிக் அலுவிகார அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க அலுவலகங்களில் தமது கடமையைச் சரிவர நிறை வேற்றத் தவறும் அரச ஊழியர் களுக்கு எதிராக உரிய நட வடிக்கை எடுக்கப்படும். பொறுப் புடன் பணிபுரியத் தவறுவோருக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப்பட மாட்டாது. அவர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நட வடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்காவின் உள்நாட்டு அலு வல்கள் மாகாண சபைகள் உள்ளூ ராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

அரச அலுவலகங்களில் பெரும் பாலான உத்தியோகத்தர்கள் மக்களுக்கான தமது கடமையை சரிவரச் செய்யாது பொதுமக்களை அலைக்கழித்துவிடுவதாகத் தொடர்ந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொறுப்புணர்வுடன் கடமை யாற்றத் தவறியுள்ளவர்களை இடம் மாற்றம் செய்யவும் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறி னார்.

சில பிரதேச செயலகங்களில் மக்கள் சேவைகள் பின்னடைவு கண்டுள்ளன. பொதுமக்களின் பணத்தை சம்பளமாகப் பெற்றுக் கொள்ளும் அரச உத்தியோகத் தர்கள் அவர்களுக்கான சேவை யினை முறையாக உரிய நேரத்தில் பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

---

# மாரியம்மன் ஆலயத்துள் நள்ளிரவில் புத்தர் சிலை!

எல்கடுவே தோட்ட ஸ்ரீ முத்துமாரி யம்மன் ஆலயத்துக்குள் பலவந்த மாக வைக்கப்பட்ட புத்தர் சிலையை ஆலயத்துக்குள்ளிருந்து அகற்றுவ தென இணக்கம் காணப்பட்டுள் ளது.

இது சம்பந்தமாக மத்திய மாகாண சபைஉறுப்பினர் எம். சிவ ஞானம் மாத்தளை பொலிசாரு டன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததையடுத்து புத்தர் சிலையை ஆலயத்திலிருந்து அப்புறப்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

எல்கடுவே பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சில சிங்கள இளைஞர்கள் பொசன் தினத்தன்றிரவு எல்கடுவே முத்துமாரியம்மன் ஆலய வளா கத்தினுள் இரவோடு இரவாக விகா ரையைப் போன்ற அறையொன்றை அமைத்து புத்தர் சிலையொன்றை அந்த அறைக்குள் வைத்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் இது விடயமாக மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். சிவஞானத்திடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

---

# கிளிநொச்சி மாவட்டத்தில் மாதிரிக் கிராமத் திட்டம்!

(அலுவலக செய்தியாளர்)

நிக்கொட் அபிவிருத்தித் திட்டங் களில் ஒன்றான சமூக அபிவிருத் தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி யில் மாதிரிக் கிராமத் திட்டம் விரை வில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தாகத் தெரியவந்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின ரின் கூட்டிணைப்புடன் மேற்படி திட் டம் விரைவில் அமுல்படுத்துவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளதெனவும் இதற்கென கிளி. அரச அதிபரினால் முதலாவ தாக பாரதிபுரம் கிராமம் தெரிவு செய் யப்பட்டுள்ளதாகவும் கிளி. மாவட்ட நிக்கொட் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் கே. பார்த்தீபன் தெரி வித்துள்ளார். (சோ)

---

# நிர்வாகக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கனகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக் கூட்டம்இன்று 25ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு மேற்படி ம.வி. மண் டபத்தில் சங்கத் தலைவி திருமதி பி. திலகநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் நிர்வாக அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் சங்க செயலர் அ. றெஜி வேண்டியுள்ளார். (சோ)

---

### -ஏ-9 பிரதான வீதியில்-

# வேகமாக பயணிகள் பேருந்தை செலுத்திய சாரதிக்கு தண்டனை

(ஒட்டுசுட்டான்)

ஏ-9 பிரதான வீதியில் பயணிகள் பேருந்தை வேகமாகச் செலுத்திய சாரதி ஒருவருக்கு தமி ழீழ காவல்துறை வாகனப் போக்கு வரத்துப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி வாகனத்தையும் நபரை யும் 15 நிமிடங்கள் நிறுத்தி அபராத மும் விதிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கிளி நொச்சி நகர்ப் பகுதியில் நடை பெற்றது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், ஏ-9 வீதிப் போக்கு வரத்து கண்காணிப்புக் கடமையில் காவல்துறையினர் ஈடுபட்டிருந்த வேளையில் மேற்படி வீதியால் வேகமாக வந்த வாகனத்தைத் தடுத்து நிறுத்தி குற்றப்பணமாக ரூபா 250 அறவிடப்பட்டுள்ளதுடன் மிதிபலகையில் பயணிகளை ஏற்ற வேண்டாம் எனவும் அறிவுறுத்தப் பட்டது. (05)

# சமாதானப் பேச்சுவார்த்தை–டோக்கியோ உதவி இடையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் -விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை ஒரு ஸ்தம்பித நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பது மட்டுமல்ல, ஒருபுறம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் ஒரு வகை நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கியுள்ளதெனலாம்.

டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டில் கிடைக்கப்பெற்ற எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகமான நிதி உதவிக்கான வாக்குறுதிகள் ரணில் அரசாங்கத்தின் வெற்றியாகப் பறை சாற்றப்பட்டதாயினும், அதனைக் கொண்டாடும் நிலையில் - அனுபவிக்கும் நிலையில் - அரசாங்கம் இன்றில்லை. அதாவது, இந்நிதி உதவிகளைப் பயன்படுத்த முடியாதவாறு அடிப்படையான சமாதான முயற்சிகளில் காணப்படும் தேக்க நிலை/முன்னேற்றமின்மை ரணில் அரசாங்கத்தின் மகிழ்ச்சியைக் கெடுத்துள்ளது.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்பதானால், விடுதலைப் புலிகளின் பரந்துபட்டதான பங்களிப்புடன் கூடியதான இடைக்கால அரசியல் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டைப் புலிகள் வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஆரம்பத்தில் இவ்விடயத்தில் போதிய அக்கறைகாட்டவில்லை.

சர்வதேச ரீதியான அபிப்பிராயம்/அழுத்தம் என்பனவற்றின் மூலமும், இராஜதந்திர முயற்சிகள் மூலமும் விடுதலைப் புலிகளை டோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற வைத்துவிடலாம் என்றே அவர்களால் கருதப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடை ரணில் விக்கிரமசிங்கவிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகவே வெளிப்படுத்தியிருந்தனர்.

டோக்கியோ மாநாட்டிற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாக தம்மைச் சந்தித்த பிரிட்டன்,நெதர்லாந்து,சுவிற்சர்லாந்துத் தூதுவர்



களிடமும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாகவே விளங்கப்படுத்தியிருந்தார். இதனை அவர்களும் புரிந்துகொண்டிருப்பார்கள் எனப் பின்னர் பத்திரிகையாளரிடம் பேசிய தமிழ்ச்செல்வன் அவர்கள் நம்பிக்கையும் தெரிவித்திருந்தார்.

ஆனால், விடுதலைப்புலிகளின் இக்கோரிக்கையில் காட்டிய ஆர்வத்தைவிட அரசாங்கம் டோக்கியோ மாநாட்டில் காட்டிய ஆர்வம் பெரிதாக இருந்தது. சர்வதேச சமூகம் புலிகளின் பங்கேற்பின் அவசியத்தை உணர்ந்து கொண்டிருந்தது போன்று உணர்ந்து கொண்டிருந்த அரசு என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருந்தது. அவ்வாறு உணர்ந்து கொண்டிருப்பின் அரசாங்கம் விடுதலைப்புலிகளை டோக்கியோ மாநாட்டில் பங்கேற்க வைப்பதற்கான முழு அளவிலான முயற்சிகளை மேற்கொண்டிருக்கும்.

ஆனால், அரசாங்கமோ, தெளிவற்றதும், புலிகளின் கோரிக்கைக்கு வெகுதொலைவிலானதுமான ஒரு திட்டத்தை கடிதம் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு டோக்கியோ மாநாட்டிற்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தது. விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் இத்திட்டத்தை நிராகரித்தபோதும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் மாற்றத்தையோ, முன்னேற்றத்தையோ வெளிக்காட்ட முனையவில்லை.

அவ்வாறு அரசாங்கம் நடந்துகொள்ளாது டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாகவே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து முன்னேற்றகரமானதொரு முடிவிற்கு வந்திருப்பின் இன்று அரசாங்கம் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது என்பது போல் இருக்க வேண்டிய நிலை எழுந்திருக்கமாட்டாது. அதாவது, டோக்கியோவில் பெறப்பட்ட நிதிக்கு விடுதலைப் புலிகளும் பொறுப்பேற்க வேண்டி வந்திருக்கும். சமாதான முயற்சிகளையும் அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டவையாக இருந்திருக்கும்.

ஆனால்,இன்று விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டுத் தீர்மானம் ஒருதலைப்பட்சமானது, தாம் அதற்குக் கட்டுப்படத் தேவை இல்லை என உறுதிபடத் தெரிவிப்பதோடு, இடைக்கால அரசியல்- நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து திட்டவரைபு ஒன்றை முன் வைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்க முடியும் என எவரது அழுத்தத்திற்கும் உள்ளாகாது கூறிக்கொள்ள முடிகின்றது.

அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்ட விதத்திலான இடைக்கால அரசியல் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்குச் சவால் நிறைந்த பணியாகும் என்பது விடுதலைப் புலிகளுக்குத் தெரியாததொன்றல்ல. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இது குறித்து தமது கடிதங்களில் சுட்டிக்காட்டாமலும் இல்லை.

அதாவது, சிறிலங்கா அரசியல் யாப்பு; நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி எதிரணியைச் சார்ந்தவராக இருத்தல்; பௌத்த-சிங்கள அடிப்படைவாத சக்திகளினதும், ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளுக்குப் புதிய தலைமை கொடுக்க முனையும் சக்திகள் என்பன பலமான எதிர்ப்பைக்காட்டலாம் என்பது புலிகளுக்கும் தெரிந்தே உள்ளது.

ஆனால், அதற்காகபிரதமர் ரணிலின் பிரச்சினைக்கு தமிழ் மக்களோ அன்றி விடுதலைப் புலிகளோ பொறுப்பேற்க முடியாது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் உள்ளன என்பதற்காக தமிழ் மக்களுக்கான தேவைகளையோ அன்றி உரிமைகளையோ சலுகை அடிப்படையில் விட்டுக்கொடுப்புச் செய்துவிட முடியாது. சிங்களப் பேரினவாத சக்திகளினதும் - அரசியல் யாப்பினதும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்கள் அரசாகத்தினரே. அத்தோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், அவரது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் இதற்குரிய தார்மீகக் கடப்பாடும் உண்டு.

எவ்வாறெனில், இன்று நிலவும் பௌத்த - சிங்கள இனவெறியை உருவாக்கியதில் ஐ.தே. கட்சியின் தலைவர்களுக்கும் சரிசமமான பங்குண்டு. அதேவேளை இன்று ரணில் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு பெரும் முட்டுக்கட்டையாகவுள்ள அரசியல் யாப்பை உருவாக்கியதும் ஐ. தே. கட்சி அரசாங்கமே என்பது மட்டுமல்ல, இவ் அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சராக அங்கம் வகித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை ஒருபுறம் இருக்க, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைப் போக்குவதற்கான முழு அளவிலான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் கூறி வருவதற்கில்லை. சமாதான முயற்சிகளில் காட்டப்படும் அக்கறையைவிட ஒருபடி மேலாக ஆயுதப் படையைப் பலப்படுத்துவதில் அது காட்டும் அக்கறையே தீவிரமாகவுள்ளது.

குறிப்பாக, சிறிலங்கா ஆயுதப்படையை நவீனப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதோடு, சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரானதொரு பாதுகாப்பு வலைப் பின்னலை உருவாக்கிக் கொள்வதிலும் அது தீவிர அக்கறை கொண்டதாகவுள்ளது. இப்பாதுகாப்பு வலைப் பின்னலானது இந்தியா, அமெரிக்காவுடனானதகவல் பரிமாற்றம் மற்றும் இயன்றளவிலான இராணுவ உதவிகளை வழங்குதல் என்பதை அடிப்படையாகக் கொண்டதாக விருத்தி செய்து கொள்ளும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

அதிலும் குறிப்பாக, சிறிலங்கா கடற்படைக்கும், இந்தியா மற்றும் அமெரிக்க கடற்படைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு என்பதில் இவை முக்கிய கவனம் செலுத்துவதாகவுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, கடந்தவார இறுதியில் அமெரிக்க நாசகாரிக் கப்பலொன்று கொழும்பு விஜயத்தினை மேற்கொண்டிருந்ததாகவும்,சிறிலங்கா கடற்படைத் தளபதி அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கடற்படைக் கட்டளைத் தலைமையகமான ஹவாய் தீவுகளுக்கு விஜயம் செய்து பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதியுடன் பேச்சுக்கள் நடத்தியமையும் சுட்டிக்காட்டத்தக்கது. ஏனெனில் இவை சிறிலங்கா-அமெரிக்கக் கடற்படைகளுக்கு இடையிலான நெருக்கத்தின் வெளிப்பாடாகும்.

இதேவேளை, கடந்த 14ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடிக்கப்பட்ட விடயத்தில் இந்தியாவின் பங்களிப்புக் குறித்தும் ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. சிறிலங்கா கடற்படைக்கும் - இந்திய கடற்படைக்கும் இடையிலான தகவல் தொடர்புப் பரிமாற்றமென்பது ஒரு தசாப்தம் அளவில் நிலவி வருகின்றமையைச் சுட்டிக்காட்டியிருந்தது. அத்தோடு, கடந்த மார்ச் மாதத்தில் விடுதலைப் புலிகளின் மற்றுமொரு கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட விடயத்தில் இந்தியா சம்பந்தப்பட்டிருந்தமை குறித்து ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.



இந்த வகையில், சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னல் ஒன்று உருவாக்கப்படுவதில், தாம் வெற்றி கண்டுள்ளதாக அரசாங்கம் கருதத் தலைப்பட்டமை காரணமாக சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படுவதில் நெருக்கடிகள், முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ள நிலையிலும், அரசாங்கத் தரப்பில் சிலர் யுத்தம் குறித்துப் பேசத் தலைப்பட்டுள்ளனர்.

அதிலும் குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் அமெரிக்க அரசிற்கும் இடையிலான உறவில் முக்கிய பாத்திரத்தை வகிப்பவரான அமைச்சர் மிலிந்த மொறகொட யுத்தம் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருப்பதானது யுத்தத்தில் அரசாங்கம் நம்பிக்கை கொள்ளும் அளவிற்கு உறவுகளில் முன்னேற்றம் காண்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

இவற்றை உன்னிப்பாக அவதானிக்குமிடத்து அரசாங்கம் போருக்குத் தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்வதில் தீவிர ஆர்வம் காட்டுவதையே உணரக் கூடியதா கவுள்ளது. ஆனால், அரசாங்கத்திற்கு இதற்கு முட்டுக்கட்டையாக உள்ள விடயமானது. டோக்கியோ மாநாட்டில் கிடைக்கப் பெற்ற நிதியானது கிடைக்கப் பெறாமல் போய்விடலாம் என்பதே.

இந்நிலையில், டோக்கியோ மாநாட்டுடன் ஓய்ந்திருந்த இராஜதந்திர முயற்சிகள் மீண்டும் தீவிரம் பெறத்தொடங்கியுள்ளது. பிரதமர்



ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளுக்கு ஏற்படக் கூடிய முட்டுக்கட்டைகளைப் போக்கி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நோக்கில் சில நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளனர். இந்த வகையில் தற்பொழுது இவ் இராஜதந்திர முயற்சிகள் லண்டனில் மையம் கொண்டுள்ளது.

ஆயினும், அரசாங்கம் சமாதான முயற்சிகளில் முழு மனத்துடனும், அக்கறையுடனும் ஈடுபாடு காட்டுகின்றதா? என்பது கேள்விக்குரிய தொன்றாகவே இருக்கும்.ஏனெனில் அரசாங்கத்தில் ஒரு தரப்பினர் இராணுவரீதியல் அரசை வலுப்படுத்துவதில் முனைப்பாக இருப்பதை எவரும் நிராகரித்துவிட முடியாது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணப்படுதல் வேண்டும். டோக்கியோ மாநாட்டில் உதவுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட நிதிபெறப்படுதல் வேண்டுமானால் அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் குறித்ததொரு தீர்க்கமானதொரு முடிவிற்கு வருதல் வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களிலும் நடவடிக்கைகளிலும் ஓரளவு நிதானமாகவும், இராஜதந்திர ரீதியிலும் கரும மாற்ற முனையினும், தமிழ் மக்களின் பிரச்சினைகள், நெருக்கடிகள் என்பன தீர்க்கப்படுவதற்கான வழி வகைகள் காணப்படும் நிலையிலேயே சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும்.

—— ஜெயராஜ்

## களுத்துறைச் சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதமிருக்கத் தீர்மானம்

### அரசியல்வாதிகள் மீது விசனம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

தமது விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிகளை வழங்கிய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இதுவரை தமது விடுதலைக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கைதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவர்களின் பராமுகத்தினால் தாம் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர். இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் சனாதிபதி சந்திரிகா குமார துங்கவைச் சந்தித்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார்.

கைதிகளின் குற்றப்பத்திரங்களை அவதானித்த பின்னரே இந்த விடயம் குறித்துத் தீர்மானிக்க முடியும் என்று சனாதிபதி பதிலளித்துள்ளார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசரகாலத்தை அமுல் செய்க

### - சிஹல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக்க ருணாரட்ண கோரிக்கை விடுத்துள் ளார்.

தெஹிவளை பொலிஸ் நிலைய பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்களைப் போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு இந்த இருசட்டங்களும் அவசியமானதாகும் எனத்தெரிவித்த அவர் விடுதலைப்புலிகள் தென்பகுதியில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசத்தின் நாயகர்களாக பிரகாசிக்கும் சிறுவர்களின் எதிர்காலம் சிறக்க உழைப்போம்

## - தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர்



(அலுவலக செய்தியாளர்)

**"பெரும் அல்லலுற்று அவதியுற்று பல இடப்பெயர்வுகள், கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து இந்தத் தேசத்தின் நாயகர்களாக இத்தேசத்தின் உதயங்களாக பிரகாசித்துக் கொண்டு வீற்றிருக்கும் சிறுவர்களை நாம் காண்கின்றோம். அவர்களுடைய எதிர்காலம் சிறக்க நாம் ஒன்றிணைந்து பாடுபடுவோம்."**

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள காந்தியில்லம், குருகுலம் ஆகிய இரு சிறுவர் இல்லங்களினது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் சிறப்புரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்;

இன்றைய இந்நிகழ்வானது எங்கள் தேசம் ஒரு பெரிய கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து அந்த யுத்தத்தின் இடைக்காலத்தில் அமைகின்ற பேச்சின் நிலையிலே குருகுலத்தின் 43ஆம் ஆண்டு நிறைவையும் காந்தி இல்லத்தின் 46ஆம் ஆண்டு நிறைவையும் நாம் இந்த அன்புச் சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டாடுகின்றோம்.

இந்நிகழ்வானது இந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு எங்கள் வருங்கால சக்திகளாகத் திகழ்கின்ற இந்தச்சிறார்களை நாங்கள் மனதார வாழ்த்துகிறோம்.

இன்று பெரும் அல்லல்கள் உற்று அவதியுற்று பல இடப்பெயர்வுகள் பெரும் கொடிய யுத்தததிற்கு முகம் கொடுத்து தம்மை இந்தத் தேசத்தின் நாயகர்களாக இந்தத் தேசத்தின் உதயங்களாக பிரகாசித்துக் கொண்டு வீற்றிருக்கும் சிறுவர்களை நாம் காண்கின்றோம்.

இவர்களுடைய எதிர்காலம் சிறக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம். இத்தகைய சிறு உள்ளங்களின் நலனுக்காக பல இல்லங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் வளரும் சிறார்களின் நலனுக்காகப் பல திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சர்வதேச நாடுகளில் இருக்கின்ற புனர்வாழ்வுக்கழக உதவியுடனும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் உதவியுடனும் இங்கு நிகழ்த்தி வருகின்றனர்.

இந்த சிறார்களின் வாழ்வுக்காக மனதார உழைக்கின்ற இந்த நெஞ்சங்களை நாங்கள் மனதார வாழ்த்துகிறோம். ஏனெனில் இந்த சிறார்களின் வாழ்வுக்காகவே நாங்கள் பெரும் போரிற்கு முகம் கொடுக்கிறோம். இந்தப் போரின் மூலம் கிடைக்கின்ற பெரும்வெற்றியை இந்தத் தேசத்தின் விடுதலையை அனுபவிக்கின்றவர்களாக ஆளுமை மிக்கவர்களாக இந்த சிறார்களின் எதிர்காலங்கள் அமைய வேண்டும் என்கின்ற எங்களின் தேசியத் தலைவரின் எண்ணக்கருவிற்கு உயிரூட்டுகின்ற வகையிலே இந்த இடத்தில் இந்த சிறார்களின் பிறப்பினைக் காண்கின்றோம்.

பல்வேறுபட்ட துயரங்களை சந்தித்த இந்தச் சிறுவர்கள் இன்று இந்த மைதானத்தில் கூடியிருந்து தமது அடுத்த ஆண்டின் காலடியை பதித்து உறவினை பகிர்ந்து கொள்கின்றனர்.

உண்மையில் இந்த சிறார்களின் வருங்காலத்திற்காக, அவர்களுடைய வாழ்விற்காக உழைக்கின்ற இந்த நிறுவனப் பொறுப்பாளர்களையும் அதன் பணியாளர்களையும் அதனை மேலும் வளர்க்க நினைக்கின்ற நல் உள்ளங்களையும் வாழ்த்துகிறோம். புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்ந்து இந்தச் செல்வங்களை தத்தெடுத்து தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்ற தமிழ் உள்ளங்களையும் வாழ்த்துகின்றோம்.

வெளிநாடுகளில் வாழ்ந்து இந்தச் சிறுவர்களின் நிலைகளை எங்களோடு பகிர்ந்து கொள்கின்றபோது, அவர்களின் மன உணர்வுகளை நாம் அறிகின்றபோது நாங்கள் மெய் சிலிர்க்கின்றோம்.

எமது உறவுகள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தாயகத்து நினைவுடனேயே வாழ்கின்றனர் என்கின்ற உண்மையை நாங்கள் நேரில் காண்கின்றோம். எங்களுடைய தேசியத் தலைவருடைய நீண்ட எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற அனைத்து உறவுகளையும் வாழ்த்துகிறோம் எனவும் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார். (லோ)

## ரத்வத்த தெரிவு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சுதந்திரக்கட்சியின் கூட்டத்திற்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் சென்று அனுருத்த ரத்வத்த கலந்து கொண்டிருந்தமை தெரிந்ததே.

## விளையாட்டு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கிளி.முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய ஒருங்கிணைப்பினரால் அக்கராயன் கந்தபுரம் கி.சே.அலுவலர்பிரிவிலுள்ள ஏழு முன்பள்ளிகள் ஒன்றிணைந்து முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு விழா கடந்த 20ந் திகதி பி.ப.3.00 மணிக்கு நடைபெற்றது.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் வே. சிறீதரன் தலைமையில் கந்தபுரம் டானியல் மைதானத்தில் நடைபற்ற இந் நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை அக்கராயன் வலயப் பொறுப்பாளர் அ. வேந்தன் ஏற்றி வைத்தார் தொடர்ந்து நிறுவன, முன்பள்ளிக் கொடிகள் ஏற்றும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளி. மாவட்ட கியூடெக் நிறுவன இணைப்பாளர் இ. கணேசபிள்ளை கலந்து கொண்டார்.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம், போரூட் நிறுவனம், கியூடெக் நிறுவனம், மெதடிஸ்த்த திருச்சபை ஆகியவற்றின் ஏழு முன்பள்ளிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மாமுனை அ.த.க. பாடசாலையில் மாவீரர் விபரத்திரட்டு திரை நீக்கம்

வடமராட்சி கிழக்கு மாமூலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்று தமிழீழ விடுதலைக்காக விதையாகிய மாவீரர்களின் பெயர் விபரத்திரட்டு திரை நீக்க நிகழ்வு நேற்று முன்தினம் மாமூலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. முற்பகல் 11. 30 மணியளவில் பாடசாலை அதிபர் செ. சிறிராமச்சந்திரன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடர்களை வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஐ. சிவஞானம், வடமராட்சி கிழக்கு காவல் பணிமனைப் பதில் பொறுப்பாளர் மதியழகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடி யினை வடமராட்சி கிழக்கு கடற்புலி களின் அரசியல்துறை மக்கள் தொடர்பாளர் யாழ்மன்னன் ஏற்றி வைத்தார்.

மாவீரர்களின் பெயர் விபரத் திட்டினை வடமராட்சி வலய கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அகவணக்கம், மலர் வணக்கம், தலைமை உரை என்பனவும் தொடர்ந்து சிறப்புரைகளை வடமராட்சி கிழக்கு புனர் அமைப்புக்குழுத்தலைவர் சி.பொன்னம்பலம், ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலய அதிபர் திரவியராசா, உடுத்துறை ம.வி. அதிபர் அரியகுமார், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறை மக்கள் தொடர்பாளர், வடமராட்சி வலய கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

## சிரமதானப் பணி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்காளி நிறுவனமான வட்டக்கச்சி கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் கடந்த வியாழனன்று வட்டக்கச்சிவைத்தியசாலையில்சிரமதானப பணிபுரிந்தனர்.நிறுவனஇணைப்பாளா பெ.ஜெயசீலன் தலைமையில் சகல பணியாளர்களும் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். (12)

# சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

தற்போதைய சமாதான முயற்சிகளின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆராயவுள்ளது.

இது குறித்துக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்கள் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.சமாதான முயற்சிகளின் எதிர் கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

## நிறைவேற்றுக் குழுக்கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டம் பிரதமர் ரணில் தலைமையில் இரத்தினபுரி எம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 04,05 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதன் போது பிரதமர் ரணில் சமாதான முயற்சிகள் குறித்து எடுத்துரைக்கவுள்ளார்.

### அடிப்படை வசதிகளற்று இயங்கிவரும்

# முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு ம.வி. எதுவித வசதிகளுமற்ற நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகின்றது.

மேற்படி பாடசாலை இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து செல்வதற்கு முன்னர் முதல்தர விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம் வகுப்பறைகளுக்கான நிரந்தரக் கட்டடங்கள் என்பவற்றுடன் 1200 மாணவர்களுடன் இயங்கி வந்தது.



இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்த இப்பாடசாலை 1996ஆம் ஆண்டு முல்லை நகரம் மீட்கப்பட்ட பின்னர் மீண்டும் சொந்த இடத்தில் 740 மாணவர்களுடன் இயங்கிவரும் நிலையில் 38 ஆசிரியர்கள்தேவையான இடத்து18 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளதோடு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, நடனம், சங்கீதம், உயிரியல் (உயர்தரம்) போன்ற பாடங்களுக்கு முற்றாகவே ஆசிரியர்கள் இல்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு 120'x20' அளவு கொண்ட சேதமடைந்த நிரந்தரக் கட்டடத்தினுள் 400இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட 10 வகுப்புக்கள் நெருக்கமான நிலையில் நடைபெற்று வருகின்றது. இதனால் ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடு முதல் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் வரை முற்று முழுதாகப் பாதிப்படைகின்றது.

கணினி கற்கை நெறிக்கான வகுப்பறை முன்னர் இருந்து சேதமடைந்த நூலக கட்டடத்தில் இயங்கி வருகின்றது. விஞ்ஞான ஆய்வுகூடம் பாதுகாப்பற்ற முறையில் மூன்று அலுமாரியில் இயங்கி வருவதோடு களஞ்சியம். ஆசிரியர் ஓய்வு விடுதி என்பன ஒரு அறையில்தான் இயங்கி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (பா)


# பணிநிலை வெற்றிடம்

நிதித்துறை ஆளுகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பெருந்தோட்டப் பகுதியில் கீழ் காணும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. கணக்குப் பதிவாளர்.**
**02. களஞ்சியக்காப்பாளர்.**
**03. உள்ளகக் கணக்காய்வாளர்.**
**04. எழுதுனர்.**

**தகைமைகள்:-**

**கணக்குப்பதிவாளர், களஞ்சியக்காப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர்**

க.பொ.த.(உ/த)இல் சித்தி அல்லது க.பொ.த(சா/த)இல் சித்தியும், மூன்றாண்டுகளுக்குக் குறையாத தொழில்சார் பட்டறிவும்.

**எழுதுனர்**

க.பொ.த (உ/த) இல் சித்தி அல்லது க.பொ.த (சா/த) இல் சித்தியும், இரண்டாண்டுகளுக்குக் குறையாத தொழில்சார் பட்டறிவும்.

**வேண்டுகை முடிவு நாள் :- 30.06.2003**

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி-** பெருந்தோட்டப் பகுதி,
இல-11பீ,
இரண்டாம் பண்ணை,
கனகபுரம்,
கிளிநொச்சி.

(3344)

## சிந்தனைக்கு

அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட பொது மக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

**தமிழீழத் தேசியத்தலைவர்**



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-06-2003

# சதிச் செயல்!

விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டமையானது யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறான செயல் என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் இந் நடவடிக்கையானது சமாதான முயற்சிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சதி நடவடிக்கை என்பது தற்பொழுது பெரும்பாலும் ஊர்ஜிதமாகியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கப்பல் மீது தாக்குதல் நடத்துவதற்கு யார் உத்தரவிட்டது என்ற சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் "நானே உத்தரவிட்டேன்" எனப் பகிரங்க வாக்குமூலம் அளித்துள்ளார். இதன்மூலம் இக்கப்பல் மூழ்கடிப்பிற்கான முழுப்பொறுப்பும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையே சார்ந்ததாகும்.

விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பலை சர்வதேசக் கடற்பரப்பிலோ அன்றி இலங்கைக் கடற்பரப்பிலோ மூழ்கடிக்கும் அதிகாரம் சிறிலங்காவிற்கு உண்டோ இல்லையோ இது ஒரு புறம் இருக்க, கப்பல் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தீர்மானம் எடுக்கவும், பணிப்புரை விடுக்கவும் அதிகாரம் சிறிலங்கா அரசில் யாருக்கு உண்டு என்பது தற்பொழுது முக்கிய விடயமாகியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முப்படைகளின் தளபதியாகவும், யுத்தத்தைப் பிரகடனம் செய்யும் அதிகாரம் கொண்டவராகவும் இருக்கையில், கப்பல் மீது தாக்குதல் நடத்த உத்தரவிடும் அதிகாரம் அவருக்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அரசாங்கத்தின் கீழ், பாதுகாப்பிற்கென ஒரு அமைச்சரும், கடற்படைக்கென ஒரு கட்டளைப் பீடமும் இருக்கையில் அவற்றிற்கு அறிவிக்காது சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையானது அரசின் செயற்பாட்டு விதிகளுக்கு எந்தவகையில் பொருத்தப்பாடானதாக இருக்க முடியும்.

அவ்வாறு இல்லாதுவிடில் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான தகவலை அவர் அறிந்த பின் இது தொடர்பான அரசாங்கத்தின் குறிப்பாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் குறித்து அவர் விபரம் கோரியிருத்தல் வேண்டும். அதன் பதில் திருப்தியளிக்காத பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கு கப்பல் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பணிப்புரையை விடுத்திருக்க வேண்டும்.

இத்தகைய நடவடிக்கையின் போது அரசாங்கம் உறுதியாகவோ அன்றித் தனது பணிப்புரைக்கு அமைவாகவோ செயற்படாத நிலையில் பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்துவிட்டுச் சனாதிபதி கடற்படைத் தலைமைப் பீடத்திற்கு உத்தரவுகளை நிறைவேற்றப் பணிப்புரைகளை விடுத்திருத்தல் வேண்டும். ஆனால், சனாதிபதி இவ்விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் எதுவித பரிசீலனையும் செய்ததாக இல்லை. அது மாத்திரமல்ல, கடற்படையின் கட்டளைப்பீடத்துடனும் பேசியதாக இல்லை. நேரடியாகவே கப்பலைத் தாக்கி மூழ்கடிக்க கடற்படைக் கப்பல்களுக்கு உத்தரவிட்டுள்ளார். அத்தோடு கப்பல் மூழ்கும் வரையில் இதனை இரகசியமாகவே வைத்துக் கொள்வதில் அக்கறையும் காட்டியுள்ளார்.

அதாவது கப்பல் மீது தாக்குதலுக்கு உத்தரவு இடப்பட்ட விடயம், பாதுகாப்பு அமைச்சிற்கோ அன்றிப் பாதுகாப்புச் செயலருக்கோ அன்றிப் பாதுகாப்பு அமைச்சருக்கோ தெரிந்திருக்கவில்லை. அதேபோன்று கடற்படைத் தளபதிக்கோ அன்றி கட்டளைப் பீடத்திற்கோ கூட அது தெரிந்திருக்கவில்லை. ஆகையினால் சனாதிபதி சந்திரிகாவினால் கப்பல் மூழ்கடிப்பதற்கான உத்தரவு இரகசியமாக விடுக்கப்பட்டதோடு, இரகசியமாகப் பேணப்பட்டதுமென்பதுமே உண்மையாகும்.

ஆகையினால், இந் நடவடிக்கையானது சனாதிபதி சந்திரிகாவிற்கு ரணில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான சதி நடவடிக்கை என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டிய தேவையில்லை. அத்தோடு இதன்மூலம் சனாதிபதி சந்திரிகா போர் நிறுத்த உடன்பாடோ, கண்காணிப்புக் குழுவினரின் அறிவிப்புக்களோ தன்னைக் கட்டுப்படுத்தாது என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும் சுட்டிக் காட்ட முடியும்.

இந்நிலையில் எழும் முக்கியமான கேள்வியானது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கையொப்பமிட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டின் 'பெறுமானம்' என்ன என்பதே. ஏனெனில், யுத்தநிறுத்தத்தை சனாதிபதி சந்திரிகா பொறுப்பற்ற விதத்தில் மீறுவார்களேயானால் விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருவதனால் ஏற்படக் கூடியது நஷ்டத்தைத் தவிர எதுவாக இருக்க முடியும்.

ஆனால், கப்பல் சனாதிபதியின் பணிப்பின் பெயரிலேயே மூழ்கடிக்கப்பட்டது. கப்பல் மூழ்கிய பின்பே எமக்குத் தகவல் தரப்பட்டது. இது அரசாங்கத்திற்கு எதிரான சதி நடவடிக்கை என அரசாங்கத் தரப்புக் கூறிக் கொள்வதினால் அதன் பொறுப்புக்கள் அற்றுப் போய்விடமாட்டாது. யுத்தநிறுத்த உடன்பாட்டில் கையொப்பம் இட்டவர்களே இந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் உடன்பாட்டினைச் செய்து கொள்ள அரசாங்கம் முன்வந்தமை பொருத்தப்பாடானதொன்றாக இருக்கமாட்டாது.

# சமாதானம் ஒருபோதும் ஏற்படாது; அரசு அனைத்தையும் தாரைவார்க்கிறது!

## சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்து

(கொழும்பு)

அரசு அனைத்தையும் தாரை வார்க்க முயல்கின்றது. சமாதானம் ஒருபோதும் ஏற்படப் போவதில்லை. இவ்வாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதின்நான்காவது வருட சம்மேளனத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசு சீரழித்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பொறுப்பேற்க வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதால் அதனைப் பொறுப்பேற்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்நாடு சுதந்திரமடைந்த பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாட்டை முன்னேற்றப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கட்சியின் பிரதான தலைவர்களுட்பட 25 தலைவர்கள் கட்சிக்காக உயிர்த்தியாகம் புரிந்தனர். தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை எம்மைப் பொறுப்பாளர்களாக்கியுள்ளது.

நாட்டின் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே. கட்சியும் இதுவரை தலா ஐந்து தடவைகள் ஆட்சிபீடம் ஏறியுள்ளன. 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அரசமைத்த ஐ.தே.க. அன்று நாட்டைப் படுகுழியில் வீழ்த்தியது. எமது கட்சி மக்களை அமைதியாக ஆட்சி செய்தது. 1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. அரசு எல்லா அதிகாரங்களையும் தனதாக்கிக்கொண்டு அடி பணியச் செய்தது. ஜே. ஆர்., பிரேமதாச ஆட்சிக் காலத்தில் நாட்டில் பெரும் அவலங்கள் நடந்தன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பிற்கு பிரபாகரனோ, ரோகண விஜயவீரவோ காரணமானவர்களல்லர். பிரேமதாச, ஜே. ஆர்., ரணில் போன்றோரே காரணமானவர்கள். அதனை ஒருபோதும் மறக்கக்கூடாது. ஐ.தே.கட்சி முக்கிய தலைவர்கள் இருந்தாலும் தமது வழியை மாற்றிக்கொள்ள அவர்களுக்கு முடியாதுள்ளது.

ஐ.தே.கட்சி எமது தரப்பிலுள்ள 10 உறுப்பினர்களைக் களவாகச் சேர்த்ததன் பின்னர் பலரை மாபியா குழுவினரைக் கொண்டு கொலை செய்தது. பொய்க் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்தது. ஜே.வி.பி.யினர் இன்று அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ளனர். எனினும் 83இல் ஜே.ஆர். தொடங்கிய போருக்கு தீர்வு காணப்படவில்லை. அரசியல்வாதிகளைத் தராதரம்பாராமல் கைது செய்யக் கூறினாலும் அது செயற்படுத்தப்படாமலுள்ளது. இனப்பிரச்சினைக்கு எந்த முறையில் தீர்வு காணப்படும் என்று அரசை எழுத்து மூலம் கோரியிருந்தும் இன்னும் பதிலில்லை.

இந்நாட்டில் போக்குவரத்துச் சபை, ரயில் சேவை, எண்ணெய்க் கூட்டுத்தாபனம் என்பவற்றை இவ்வரசு தனியாருக்கு விற்க முயன்றது. எனது தலையீட்டால் தப்பியுள்ளன. கூ. மொ. வி.யை அதன் தலைவர் சாப்பிட்டுவிட்டார். இவ்வாறு நாட்டின் பொருளாதாரம் அழிந்து போகின்றது. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நிதியில்லை என்கிறது. அவர்களுக்கு குறைந்த வேதனமே வழங்கப்படுகின்றது. நாம் 97-98 காலப் பகுதியில் அவர்களின் சம்பளத்தை அதிகரித்தோம்.

ஜே. ஆரின், பிரேமதாசவின் காலத்தில் கூட ஒப்பந்தம் ஏற்படவில்லை. எழுத்து மூல உடன்படிக்கைகள் ஏற்படவில்லை. இன்று அரசு இவையாவற்றையும் செய்து இடைக்கால நிர்வாக சபையைப் புலிகளிடம் கொடுத்துள்ளது. அனைத்தையும் தாரைவார்க்கும் தலைவர் எமக்குத் தேவையில்லை. சமாதானம் ஒருபோதும் ஏற்படாது. தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான சமாதானத்திட்டமே எமக்குத் தேவை. நாமே சமாதானத்திற்கு அத்திவாரம் இட்டோம். நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பு அவசியம்.

ஜே.வி.பி.க்கும், சு.கட்சிக்கும் பொறுப்புக்கள் உள்ளன. அதை யாரும் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். ஜே.வி.பி. மட்டுமன்றி இடது சாரிகள் அனைவரும் எம்முடன் இணைந்து புதிய கூட்டணி அமைக்க முன்வரவேண்டும். அப்போது இவ்வரசு பயப்படலாம் என்று கூறினார்.

# புலிகளை தடை செய்யும் பரிந்துரை கனேடிய அரசாங்கத்தால் நிராகரிப்பு!

கனடாவில் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டுமென்ற அந்நாட்டுப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையைக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பெல் கிரஹாம் நிராகரித்துள்ளார்.

கனடாவில் தடை செய்யப்பட வேண்டிய 06 வெளிநாட்டு அமைப்புக்களின் பட்டியலில் அந்நாட்டுப் பாதுகாப்புப்பிரிவு விடுதலைப் புலிகளினது பெயரையும் சேர்த்திருந்தது.

எனினும் இப்பட்டியலில் விடுதலைப்புலிகளின் பெயரைச் சேர்ப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் பெல்கிரஹாம் அப்பட்டியலில் புலிகளின் பெயரை இணைப்பதை நிராகரித்துள்ளார்.

இதனால் 1985 இல் எயர் இந்தியா விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்த சீக்கியத் தீவிரவாத அமைப்பான பாபர் கால்வா உட்பட 5 வெளிநாட்டு அமைப்புக்கள் அங்கு தடை செய்யப்படவுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சுக்களில் புலிகள் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் இந்தப் பட்டியலில் புலிகளின் பெயரைச் சேர்ப்பது அவர்களுக்குப் பிழையான செய்தியைத் தெரிவித்துவிடுமென வெளிவிவகார அமைச்சுக் கருதுவதாலேயே இப்பட்டியலில் புலிகளின் பெயரை இணைக்க அரசு மறுத்துவிட்டது.

புலிகள் அமைப்பைத் தடை செய்துவிட்டால், இலங்கை அரசிற்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் போது புலிகளின் தலைவர்கள் அதில் பங்குபற்றுவதைத் தடுத்துவிடுமென வெளிவிவகார அமைச்சர் கருதுவதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


# தேர்தல் ஆணையாளர் மனு; விபரமறிய நீதியரசர் முடிவு

(கொழும்பு)

17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவை அமைத்துத் தம்மை ஓய்வில் செல்ல அனுமதிக்காமை, தமக்கு இழைக்கப்பட்ட உரிமை மீறல் எனத் தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றில் சமர்ப்பித்த மனுவைப் பரிசீலனை செய்யுமுன் நீதிபதியுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் முதலாம் திகதி நீதிமன்றில் சமுகமளிக்குமாறு நீதிபதிக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. கலாநிதி சிரோமினி பண்டாரநாயக்க அசோகடி சில்வா, நிகால் ஜயசிங்க ஆகிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழுவுக்கு இம் முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

# விம்பிள்டனில் ஹெவிட் அதிர்ச்சித் தோல்வி கார்லோனி, வீனஸ், டெவன்போட் முன்னேற்றம்

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான லைட்டன் ஹெவிட் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.




சுமார் நான்கரைக் கோடி ரூபாய் பரிசுத் தொகையுடன் கூடிய சாம்பியன் பட்டத்திற்கான விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் பிரிட்டன் தலைநகர் லண்டனில் நேற்று முன்தினம் தொடங்கியுள்ளது.

இப் போட்டியில் ஆடவர் பிரிவிற்கான முதல் சுற்றுப் போட்டியில் நடப்புச் சாம்பியனும் அவுஸ்திரேலிய வீரருமான லைட்டன் ஹெவிட், குரேஸியா நாட்டைச் சேர்ந்தவரும் தரப் பட்டியலில் 203 ஆம் இடத்தில் இருப்பவருமான ஹிவா கார்லோனிஸை எதிர் கொண்டார்.

இதில் அதிர்ச்சியளிக்கும் விதத்தில் ஹெவிட் 6:1,6:7,3:6,4:6 எனும் செட் கணக்கில் தோல்வியடைந்துள்ளார்.

126 ஆண்டு கால விம்பிள்டன் வரலாற்றில் நடப்புச் சாம்பியன் ஒருவர் முதல் சுற்றிலேயே தோல்வியைத் தழுவியது இரண்டாவது முறையாகும்.

மேலும், மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சும், வின்ஸர் டெவன் போட்டும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

வீனஸ்வில்லியம்ஸ் ருவேட்டியாவின் தான்ஸ்ரோபாவையும், வின்ஸர் டெவன் போட், அவுஸ் திரேலியாவின் செமந்தாவையும் முதல்சுற்றில் தோற்கடித்துள்ளார்கள்.

# வட்மோரின் அபிப்பிராயம்

சுற்றுப் போட்டிகளின் வெற்றி தோல்விகளை வைத்து, பங்களாதேஷ் அணியின் ஆட்டத்தை மதிப்பிட முடியாது. அதைவிட நாம் ஒவ்வொரு வீரர்களிலும் அடையாளம் கண்டுள்ள திறமைகளில் எந்தளவு முன்னேற்றம் ஏற்படுகின்றது என்பதை வைத்தே அணியின் ஆட்டத்தை மதிப்பிட வேண்டும் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுடன் அடுத்த மாதம் 18 ஆம் திகதி இரு டெஸ்ட் போட்டிகளிலும், ஆகஸ்டில் 3 ஒருநாள் போட்டிகளிலும் பங்களாதேஷ் விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### - உ.பா.வலயப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை -

# இந்தியாவிலுள்ள அகதிகளை திருப்பிஅழைக்க சாத்தியமில்லை

### - யாழ்.திட்டமிடல் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை இலங்கை அகதிகளை இந்தியாவிலிருந்து அழைப்பது சாத்தியப்படாது என யாழ்.மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர் சேவைகளை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்த வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, மாவட்டச் செயற்திட்ட அதிகாரிகளுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை வரவழைத்து குடியமர்த்த உதவுமாறு அதிகாரிகளிடம் மக்கள் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திட்டமிடல் பணிப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாது அல்லற்படும் மக்கள் வீடுகள் இல்லாமல் இந்தியாவுக்குச் சென்ற மக்களின் வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்கின்றனர். இதைவிட இந்தியாவுக்குச் சென்ற மக்களின் பெரும்பான்மையான வீடுகள் பாதுகாப்பு வலயத்திலுள்ளன.

இதனால் இந்தியாவிலிருந்து அகதிகளை அழைப்பதாயின் இப் பாதுகாப்புவலயப் பிரச்சினைக்கு முற்றாகத் தீர்வு கண்டபின்னரே அழைப்பது சாத்தியமாகும். ஏனெனில் இவர்களை அழைப்பதனால் பெருமளவு இடநெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என்றும் ,அவர் தெரிவித்தார். (33)

## இருபொலிஸ் கான்ஸ்டபிள்களையும் பெற்றோர் பார்வையிட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாற்றில் விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் நேற்று அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பார்வையிட்டுள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளான மாத்தளையைச் சேர்ந்த சேனாதீர மற்றும் தம்புள்ளவை சேர்ந்த நிகால் ஆகியோர் கடந்த பத்தாம் திகதி விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

குறிப்பிட்ட கான்ஸ்டபிள்களின் பெற்றோர் மற்றும் உறவினர் ஒன்பது பேர் கண்காணிப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டுத் திரும்பி உள்ளனர்.

இவர்கள் தமதுபிள்ளைகளுடன் ஐந்து மணி நேரம் தங்கி இருந்தனர்.

## யாழ்.ஆனைக்கோட்டைப்பகுதியில் இரு குழுக்களுக்கிடையே மோதல்

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் மூத்த விநாயகர் ஆலயத்தில் இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தக் கோஷ்டி மோதலில் சிலர் காயமடைந்துள்ளார்கள். ஆனால் பொலிசாருக்குப் பயந்து இவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறவில்லை.

இக்கோவிலில் தற்பொழுது நடைபெறும் ஆலயத்திருவிழாவில் கலந்துகொண்ட பெண்கள் மீது சேஷ்டை புரிய முற்பட்ட வேளையிலேயே இந்தக் கோஷ்டி மோதல் ஏற்பட்டது. இம்மோதலில் பொல்லுகள், சயிக்கிள் செயின், கத்தி என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை அடக்க முற்பட்ட பொலிசார் மிகவும் கஸ்டப்பட்டு இதனை அடக்கியதாகத் தெரியவருகிறது. (33)

### ம.நே.கண்ணிவெடி...

அகற்றும் பிரிவின் பாசறை ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அணியில் 27 பேர் இடம் பெறுகின்றனர் இவர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படுவதோடு சர்வதேச நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிகளைப் பெறும் இவ் அணியினர் கடந்த காலங்களில் வன்னியின் பல பகுதிகளையும் ஆக்கிரமித்திருந்த சிறிலங்காப் படையினர் புதைத்துவிட்டுச் சென்ற ஏராளமான வெடிபொருட்களை அகற்றும் மனிதநேய பணியில் ஈடுபடுவர். கடந்த காலங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகளில் ஆண்கள் மாத்திரமே இணைக்கப்பட்டு வெடிபொருட்களை அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது மகளிரையும் அதன் செயல்பாடுகளில் இணைத்திருப்பது ஒரு புதிய திருப்பமாகக் கருதப்படுகிறது. (லோ)

### இடைக்கால...

புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்.

அரசாங்கம் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை இணைப்பதற்கு ஆர்வமாக உள்ளது.

வடக்கு கிழக்கு நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றார்.

விடுதலைப்புலிகள் மிகவும் பொறுமையுடன் நடந்து கொள்வார்கள். சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எந்த இடையூறும் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### லொத்தர்...

ஆகிய இருவரும் லொத்தர் சபையிலிருந்து பணம்பெற்றுள்ளனர். இது மிகவும் பாரதூரமான விடயம் என்றபடியால் பிரதமர் நாடு திரும்பியதும் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என சனாதிபதியின் பேச்சாளர் கூறியுள்ளார்.

### அமைச்சரவையில்...

மாற்றத்தைக் கொண்டு வருவதற்குத் தீர்மானித்திருப்பதாக சனாதிபதியுடன் மிக நெருக்கமான சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

லண்டன் புறப்படுவதற்கு முன்னர் பிரதமரை, சனாதிபதி சந்தித்த போது அமைச்சரவை மாற்றம் குறித்தும் சுட்டிக்காட்டியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

பிரதமர் நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றம் குறித்து சனாதிபதி பேசவுள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரம் கூறியுள்ளது.

அமைச்சரவையில் பாதுகாப்பு, உள்துறை, தொடர்புத்துறை அமைச்சுக்கள் உகந்த முறையில் செயற்படவில்லையென்று சனாதிபதி, பிரதமரிடம் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருந்ததாகவும் தெரியவருகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரத்தில் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் செயற்பட்ட முறை சனாதிபதிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் இன்னமும் சனாதிபதியின் உத்தரவை நிறைவேற்ற அவர் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்துறை அமைச்சின் செயற்பாடுகளும் இவ்வாறேயுள்ளதாகவும், பொலிஸார் தமது கடமையை நேர்மையாக மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படவில்லையெனவும் தலைநகரிலும், நாட்டின் பல பகுதிகளிலும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகளும் திருப்தியளிக்கவில்லை. முப்படைகளுக்கு சனாதிபதி விடுக்கும் பணிப்புரைகளைக் கூட நிறைவேற்றுவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகள் தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை மாற்றத்திற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்காது போனால் சனாதிபதி உறுதியான நடவடிக்கை எடுக்கும் நிலை ஏற்படலாமெனவும் அது ஆட்சிமாற்றம் ஒன்றாக இருந்தால் கூட வியப்பதற்கில்லை எனவும் சனாதிபதி செயலக வட்டாரம் கூறியுள்ளது.

## அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் அடிப்படை வசதிகள் பாதிப்பு

### நெடுந்தீவு மக்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

அரச அதிகாரிகளின் அலட்சியப் போக்குகளினால் தம் அடிப்படை வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடம்பெயர் சேவையை நடத்தச்சென்ற மனிதவுரிமை ஆணைக் குழுவிடம் நெடுந்தீவு மக்கள் முறையிட்டுள்ளார்கள்.

இப்பகுதிகளில் மருத்துவ வசதிகள் இல்லை. இங்குள்ள வைத்திய சாலையில் ஒரு வைத்தியர் மட்டுமேயுள்ளதால் வைத்திய சேவையை நோயாளர்கள் பெறுவதில் சிரமப்படுவதாகவும் இங்கு சாதாரண பனடோல் குளிசைக்கே தட்டுப்பாடுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதைவிட இங்கு மின்விநியோகம் சீரற்றுள்ளதாகவும் மின்விநியோகத்துக்கென 1000 ரூபாவுக்கு அதிகமாக கட்டணம் அறிவிடப்படுவதாகவும் கூறியுள்ளனர்.

பாடசாலைகளில் மிகவும் ஆசிரியர் பற்றாக்குறையுள்ளதாகவும், அந்தப் பாடசாலைகளில் மலசலகூட வசதிகள்கூட இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். (33)

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 2வது இடத்திற்கு ராஜபக்ஷ

சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். கட்சி அவரை கட்சியின் இரண்டாவது உயர் இடத்திற்கு கடந்த ஞாயிறன்று நடைபெற்ற மாநாட்டில் தெரிவுசெய்துள்ளது.

"இதன் மூலம் அனுராபண்டார நாயக்கா கட்சித் தலைமையைக் கோருவது முடியாது." என ராஜபக்சவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தெரிவுகளின் படி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கட்சியின் சிரேஷ்ட உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஏனைய உபதலைவர்களாக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, டி.எம்.ஜெயரட்ண, கிங்ஸ்லி ரி.விக்கிரமரட்ண ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அனுரா பண்டார நாயக்க பிரதித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனா செயலாளராகவும், அனுருத்த ரத்வத்த தேசிய அமைப்பாளராகவும், மங்கள சமரவீர பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### - யாழ்-குடா நாட்டில் -

## மீளக்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு வழங்கமுடியாது செயலகம் திண்டாட்டம்

மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் மீளக் குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவைக் கொடுக்க நிதியில்லாமை காரணமாக யாழ். அரச செயலகம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது.

சுமார் 40000 குடும்பங்கள் இம்மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவுகளைப் பெறத் தகுதிபெற்ற போதும் இதுவரையும் 4500 குடும்பங்களுக்கு மட்டுமே இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது. மீதியாகவுள்ளவர்களில் பெரும்பானவர்களிடம் கையொப்பங்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியான நிலையிலும் கூட இவர்களுக்கான நிதியுதவி இன்னமும் வழங்கப்படவில்லை. இக் கொடுப்பனவுக்கான நிதியுதவி இன்னமும் வந்தடையாமையே இதற்கான காரணம் என்று அரச செயலகம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க மீளக் குடியமர்வுப் படிவங்களை பூர்த்தி செய்வதிலும் சில முறைகேடான நிகழ்வுகள் சில இடங்களில் இடம் பெற்றுள்ளதாக முறையிடப்படுகிறது. (33)

## ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளை ஆட்சேர்ப்பதற்கான செய்முறைப்பரீட்சை – 28.06.2003

17.05.2003ம் திகதியன்று கிளி/பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு மேலதிகமான செய்முறைப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட பெயர்களை உடையோர் எதிர்வரும் 28.06.2003ம் திகதியன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள எனது பணிமனையில் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றும்வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| பெயர் | முகவரி |
| --- | --- |
| 01. முருகேசு சிறிதரன் | இல-454, அந்தோனியார் கோவிலடி, அக்கராயன்குளம். |
| 02. கதிரமலை பத்மநாதன் | பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி. |
| 03. செல்லையா சதீஸ்குமார் | விவேகானந்தநகர், கிளிநொச்சி. |
| 04. செல்லத்துரை ரவிச்சந்திரன் | இல-59, பாலிநகர், வவுனிக்குளம். |
| 05. ஆறுமுகம் சுந்தரலிங்கம் | 4ம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 06. சோமபாலன் ஜெயக்கனேஸ் | 6ம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு. |
| 07. சொர்ணலிங்கம் கோடீஸ்வரன் | சுதந்திரபுரம், உடையார்கட்டு, முல்லைத்தீவு. |
| 08. கதிரவேலு சிவபஞ்சாட்சரம் | இல-176,டி-10, உருத்திரபுரம், கிளிநொச்சி. |
| 09. பத்மநாதன் நவரத்தினராசா | செட்டியகுறிச்சி, பூநகரி. |
| 10. பாலசுப்பிரமணியம் பாஸ்கரன் | செஞ்சிலுவைச்சங்கம், கிளிநொச்சி. |
| 11. பெர்னாண்டோபிள்ளை வில்லியம் யோன்சன் | ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம். |
| 12. டெமாரிமுத்து பண்டாரம் | இல-51/2, தருமபுரம், பரந்தன். |
| 13. கணபதிப்பிள்ளை கஜேந்திரகுமார் | இல-69, ஜெயந்திநகர், கிளிநொச்சி. |
| 14. தங்கராசா ஜெயந்தன் | இல-08, டி-08, உருத்திரபுரம், கிளிநொச்சி. |
| 15. தியாகராசா மகேந்திரன் | விநாயகபுரம், கிளிநொச்சி. |
| 16. நல்லையா கோபிநாத் | 34, ஆனந்தநகர், கிளிநொச்சி. |

**வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,**
**மா.சு.சே.பி.பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(சி-8181)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.